தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, ஆனி 31, திருவள்ளுவர் ஆண்டு 2050

2019 ஜூலை 16, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> *“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
> *வாய்நாடி வாய்ப்பச் செயல்.”*

நோய் இன்னதென்று ஆராய்ந்து அதன் அடிப்படைக் காரணத்தையும் ஆய்ந்து, முதலில் அதனைத் தீர்க்கும் வழியை ஆய்ந்து, அது உடலுக்கு ஏற்றவாறு அறிந்து, செய்வதே சிறந்த மருத்துவம் ஆகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

111—

பழத்தோட்டப் பயிர்களைப் பயிரிடுதல்

***35967—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அட்டகட்டி மற்றும் குரங்கு அருவி பகுதியில் உள்ள காடுகளில் பழத்தோட்டப் பயிர்களான மா, பலா மற்றும் வாழை ஆகியவற்றைப் பயிரிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள் கேட்ட கேள்விக்கான விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, அட்டகட்டி மற்றும் குரங்கு அருவி பகுதியில் உள்ள வனப் பகுதியானது, ஆனைமலை புலிகள் காப்பக உள்மண்டலப் பகுதியில் Core Zone*–ல் உள்ளது. தோட்டக்கலைப் பயிர்களில்* (Horticultural Crops) *முக்கிய பழப் பயிர்களான மா, பலா, வாழை போன்றவற்றை வன விலங்குகள் இயற்கையாகவே மிகவும் விரும்பி உண்ணும். மேலும், வனப் பகுதியில் வனம் அல்லாத பயிர்களை நடுவது வனக் கொள்கை–* Forest Policy*–க்குப் புறம்பானதாகும்.*

இதுதவிர, ஆனைமலை புலிகள் காப்பக உள்மண்டலப் பகுதிக்குள் செல்வதற்கு தேசிய புலிகள் பாதுகாப்புக் குழு National Tiger Conservation Authority *தடை விதித்துள்ளது. எனவே, மா, பலா, வாழை போன்ற பழ வகைப் பயிர்களை வால்பாறை தொகுதி, அட்டகட்டி மற்றும் குரங்கு அருவி பகுதியில் பயிரிடுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் நித்தம், நித்தம் வழிபடும் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள், 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று வாழ்ந்து காட்டிச் சென்ற தங்கத்தாரகை அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் வழியிலே ஏழையெளிய மக்கள் வாழ்க்கை மேம்பட, சிறப்பாக ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன்* OPS *அவர்களையும், உள்ளாட்சியிலே நல்லாட்சி செய்கின்ற எங்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் சகோதரர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்குகிறேன்.*

2019 ஜூலை 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதியான குரங்கு அருவி, அட்டகட்டி போன்ற பகுதிகளில் அரிய வகை குரங்குகள், கரடிகள், மான்கள், வரையாடுகள் அதிக அளவில் உள்ளன. இவ்வன விலங்குகளுக்குப் போதிய உணவு கிடைக்காததால், அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வாகனங்களில் உள்ள பொருட்கள் மற்றும் பழங்களை குரங்குகள் எடுத்துச் சென்று விடுகின்றன. எனவே, வன விலங்குகளின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே, வனத் துறையின்மூலம் மா, பலா, வாழை, கொய்யா, சப்போட்டா போன்ற பழ வகை மரங்களை வளர்த்தால், அவற்றிற்கு உணவு கிடைப்பதோடு, அவை வாகனங்கள் செல்லும் பகுதிகளுக்கு வராமலும் இருக்கும். எனவே, அந்தப் பழ வகை மரங்களைப் பயிர் செய்ய அரசு முன் வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வனப் பகுதிக்குள் புளி, புங்கன், வேம்பு, ஆவிமா, பீநாறி, மகாகனி, ஆல் அரசு, உடைவேல், வெள்வேல், நீர், மருது, நாவல், நெல்லி, விளா போன்ற வறட்சியைத் தாங்கக்கூடிய மர வகைகள்தான் வனத் துறையின்மூலம் நடவு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் அட்டகட்டி மற்றும் குரங்கு அருவி போன்ற பகுதிகளில் உள்ள காடுகளில் பழத் தோட்டப் பயிர்களான மா, பலா, வாழை ஆகியவற்றைச் சாகுபடி செய்தால், குரங்கு, யானை, கரடி போன்ற வன விலங்குகள், விளையும் பயிர்களை உண்பதற்காக அதிக எண்ணிக்கையில் வரத் தொடங்கும். இதன் விளைவாக மனித உயிரின மோதல்கள் அடிக்கடி நேரிடவும், அப்பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு மிகுந்த இடையூறு ஏற்படுவதற்கும் நாமே வழிவகுத்ததாக ஆகிவிடும். இதுபோன்ற மர வகைகள் இங்கு நடவு செய்யப்படும்பட்சத்தில், இயற்கையாக வளர்கின்ற, இயற்கை மர வகைகள் பாதிப்படைந்து, இயற்கை வளம் சேதம் ஏற்படவும், இதனால் சுற்றுச்சூழல் பாதிப்படையவும் வாய்ப்பு உள்ளது.*

முற்பகல் 10–05

மேலும், இது வன நிலங்களை தனியார்கள் உரிமம் கொண்டாடவும் வழிவகை செய்யும். எனவே, இப்பகுதியில் வன விலங்குகள் விரும்பி உண்ணும் பழத் தோட்ட பயிர்களைப் பயிரிடுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

திருமதி வி. கஸ்தூரி வாசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நல்லமுடி பூஞ்சோலை காட்சிமுனையை மேம்படுத்தி அங்கிருந்து மற்ற பகுதிகளைப் பார்க்க ஏதுவாக, தொலைநோக்கி அமைப்பதோடு, அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குக் கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தரவும், குரங்கு அருவியில் தற்போதுள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அவர்கள் குளித்து உடை மாற்றுவதற்கு ஏற்கெனவே உள்ள வசதிகளை மேம்படுத்தித் தரவும் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பல வினாக்களை வைத்து ஒரு கேள்வியாகத் தொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்லமுடி பூஞ்சோலை காட்சிமுனையில் telescope–தொலைநோக்கி அமைக்கவும், அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தித் தரவும், குரங்கு அருவியில் ஏற்கெனவே குளித்து உடை மாற்றுவதற்காக உள்ள வசதிகளை மேம்படுத்தித் தரவும் கோரிக்கை வைத்துள்ளார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களும், சட்டமன்ற உறுப்பினரோடு கோவை மாவட்டம் முழுவதும் வனத் துறைக்குச் சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்ட இடங்களை எல்லாம் சுற்றிப் பார்த்தபோதே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்

இந்தக் கோரிக்கையை வைத்து, இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதே கேள்வியைத்தான் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். நல்லமுடி பூஞ்சோலையானது தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரண்டு மாநிலங்களின் எல்லையைப் பார்த்து ரசிக்கக்கூடிய இடம் என்பதால் இந்த இடத்தில் telescope தொலைநோக்கி அமைத்தல் மற்றும் கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்; அதுபோல, குரங்கு அருவிக்கு தற்போது வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அவர்கள் குளித்து உடை மாற்றுவதற்கு தற்போதுள்ள வசதிகளை மேம்படுத்துதல் என மாண்புமிகு உறுப்பினர் வைத்துள்ள அத்தனை கோரிக்கைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதியாதாரத்தின் அடிப்படையில் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

112—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***48918—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை, ஆலத்தூர் நாடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,